உதவித் தொகை வழங்கப்படுவதில்லை என்ற அரசு ஆணையை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் கோவில்களிலும், ரெஜிஸ்டிரார் ஆபீஸ்களிலும், விடுகளிலும் திருமணம் செய்யும்போது, அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறதென்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வோர் ஆண்டும் இதற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இந்த 5 கோடி ரூபாயும் செலவழிக்கப்பட்டுவிடுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்பட்டு, அந்தத் தொகை முழுவதுமாகச் செலவு செய்யப்படுகிறது. ஏதாவது ஓரிடத்தில் அவருடைய தொகுதியில் தரப்படவில்லை என்று சொன்னால், அந்த மனுவை என்னுடைய பரிசீலனைக்கு அனுப்பினால், தகுதியின் அடிப்படையில் பரிசீலித்து, வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 98. டாக்டர் க. கோபால், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

98--

திருமருகல் ஆதிதிராவிட மாணவர்கள் விடுதிக்குச் சொந்தக் கட்டிடம் கட்டுதல்

* *9985*-**டாக்டர் க. கோபால்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) நன்னிலம் தொகுதி, திருமருகலில் ஆதிதிராவிட நலத்துறை மாணவர்கள் தங்கும் விடுதிக்குச் சொந்தமான கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த நிதி ஆண்டில் பணி தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நன்னிலம் தொகுதி திருமருகலில் ஆதிதிராவிடர் நலத்துறை மாணவர்கள் மற்றும் தங்கும் விடுதிக்கு

அரசுக் கட்டடம் கட்டுவதற்குத் தகுதியான புறம்போக்கு நிலம் இல்லாத காரணத்தால் வரும் ஆண்டுகளில் தகுதியான நிலம் கையகப்படுத்தப்பட்டு நிதி நிலைமைக்கு ஏற்ப புதிய கட்டடம் கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமருகல் பகுதியில் 3 அரசு மேல்நிலைப் பள்ளிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒன்று திருமருகல் அரசு மேல்நிலைப் பள்ளி, மற்றொன்று ஏனங்குடி அரசு மேல் நிலைப் பள்ளி, மற்றொன்று திட்டச்சேரி அரசு மேல்நிலைப்பள்ளி. இந்த மூன்று மேல்நிலைப் பள்ளிகளிலும் சுமார் 2,500க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள அவர்களின் பெற்றோர்களின் பொருளாதார நிலையும் சிரமத்தில் இருப்பதால் இந்த மாணவர்கள் தங்களுடைய ஊர்களில் இருந்து வந்து படிக்க இயலாத நிலை ஏற்படுகிறது. அவர்களுடைய பொருளாதார நிலையும் கீழே உள்ளது. அதனால் அவர்கள் மேற்படிப்புக்குச் செல்ல இயலாத நிலையும் உள்ளது. ஆகவே இந்த மூன்று பகுதிகளையும் இணைத்து வரும் நிதியாண்டில் ஒரு ஆதி திராவிடர் மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆதிதிராவிட நல விடுதிக்கு கட்டிடம் கேட்டிருந்தார்கள். கட்டிடம் கட்டுவதற்கான இடம் கையகப்படுத்தப்பட்டு கட்டித் தரப்படும் என்பதை அறிவித்து இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 99, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

99--

கன்னியாகுமரி மாவட்டத்தைச்சார்ந்த வெள்ளாளர் இனத்தை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

* 16893-**டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:**